# தமிழ் மாநில காங்கிரஸ் (மூ) 2026 சட்டமன்ற தேர்தல் அறிக்கை

தமிழ் மாநில காங்கிரஸ் நிறுவனர் அய்யா ஜி.கே. மூப்பனார் அவர்களின் தாரக மந்திரமான “வளமான தமிழகம் – வலிமையான பாரதம்” அமைப்பதே எங்களின் குறிக்கோள்.

**ஆட்சி நிர்வாகம் :**

இக் குறிக்கோளை முழுமையாக அடைய தமிழகத்தில் அமைய இருக்கும் அ.தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் பெருந்தலைவர் காமராஜர், மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களின் கோட்பாடுகளான **பொது வாழ்வில் நேர்மை, தனிவாழ்வில் எளிமை, ஆட்சி அதிகாரத்தில் தூய்மை,**

**வெளிப்படையான நிர்வாகம், மத்திய அரசுடன் இணக்கமான போக்கு** என்ற ஐந்து அம்ச தாரக மந்திரத்தை அடைய தமிழ் மாநில காங்கிரஸ் உறுதியளிக்கிறது.

## மதுவிலக்கு :

தமிழகத்தில் படிப்படியாக பூரண மதுவிலக்கை அமல்படுத்த நடவடிக்கை எடுப்போம். கள்ளச்சாராயம், கஞ்சா, ஹெராயின், பொக்கைன், போதை சாக்லேட் போன்ற சமூக சீரழிவுகளுக்கு எதிராக கடும் சட்டம் இயற்றி அவை அடியோடு ஒழிக்க வலியுறுத்தப்படும்.

## விவசாயம் :

1. விவசாயிகள் உற்பத்திச் செய்யும் விவசாய விளைபொருட்களுக்கு, உற்பத்தி செய்யும் விவசாயியே விலை நிர்ணயம் செய்யும்

உரிமையை பெற்றுத் தருவோம். மேலும் தேவைக்கு அதிகமாக உற்பத்திச் செய்யும் விவசாய பொருட்களைப் பாதுகாக்கத் தேவையான குளிர்பதன கிடங்குகள், மழை, புயல் வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாக்க வட்டார, தாலுக்கா, மாவட்ட அளவில் உரிய பாதுகாப்பான கிடங்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

2. நெல் மற்றும் கரும்புக்கு கட்டுப்படியாகும் ஆதார விலையை பெற்றுத்தர ஆவண செய்வோம்.

3. எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நலன் கருதி நியாய விலைக் கடைகளில் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யும்

பாமாயிலுக்கு பதிலாக, தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய், நல்லெண்ணெய் வழங்க தமிழ் மாநில காங்கிரஸ் உறுதியளிக்கிறது.

4. பால் உற்பத்தியாளர்கள் மற்றும் கறிக்கோழி பண்ணை விவசாயிகள் நலன் கருதி உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி பொருளுக்கு கட்டுப்படியாகின்ற விலையை பெற்றுத் தருவோம்.

5. ஆண்டுதோறும் விவசாயிகளின் நலன் காக்க ரூ.6000 வழங்கி வரும் பாரத பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்களைப் பாராட்டுவதோடு, மேலும் இந்தத் தொகையை உயர்த்தித் தர தமிழ் மாநில காங்கிரஸ் வலியுறுத்தும்.

## நீர் மேலாண்மை :

1. காவிரி – வைகை – குண்டாறு இணைப்புத் திட்டம்.
2. ஆனைமலையாறு – நல்லாறு அணைத் திட்டம்.
3. நாமக்கல் மாவட்டம் திருமணிமுத்தாறு – பொன்னியாறு – காவிரி – மேட்டூர் அணை உபரி நீர் திட்டம்.
4. காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடக எல்லையில் மேகதாது ராசிமணல் நீர் தேக்கத் திட்டம்.
5. மாயாறு – பாண்டியாறு – புன்னம்புழா பாசனத் திட்டம்.
6. தென்பெண்ணை – பாலாறு இணைப்பு.

7. மேகதாது அணை, முல்லை பெரியாறு அணை பிரச்சனையை நிரந்தர தீர்வு காணும் செயல் திட்டம்.

மேற்காணும் தமிழகத்தின் ஜீவாதாரமான நீர் ஆதார திட்டங்களை போர்க்கால அடிப்படையில் நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

## நதி நீர் இணைப்பு :

இந்தியாவில் ஆந்திரா போன்ற மாநிலங்கள் நதி நீர் இணைப்பை 100 சதவீதம் வெற்றி கரமாக முடித்து இருக்கின்றன. இந்த நதி நீரை மாவட்டத்திற்கு – மாநிலத்திற்கு இடையே இணைப்பதற்கு முயற்சிகளை மேற்க்கொண்டால் தமிழகத்திற்கு பல்வேறு நன்மைகள் விளையும். விவசாயிகள் மகிழ்ச்சி அடைவர். நீர் வழிப் போக்குவரத்து மற்றும் வணிகம் மேம்படும்.

பெரும் வாய்க்கால்களை தூர்வாரி ஒரு நீர் தேக்கத்தையும் இன்னொரு நீர் தேக்கத்தையும் இணைத்து அதன் மூலம் நீர்வழிப் போக்குவரத்தை மேம்படுத்தலாம். கிராமங்களில் நீர்த்தேக்கத்திற்கு அருகில் பூங்காக்கள் அமைத்தால் கிராமப்புறத்தில் ஒரு பொழுது போக்கு அம்சம் ஏற்படும். இது குறித்து மாநில அளவிலான ஆய்வு மேற்கொண்டு திட்டம் வகுக்கத் துணை நிற்போம்.

## ஜவுளி தொழில் மேம்பாடு :

தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மிகப்பெரிய தொழில் ஜவுளி. இதில் கைத்தறி, விசைத்தறி, பனியன் உற்பத்தி, சைசிங், பிளீச்சிங், டபூளிங், கதர் கிராம தொழில் போன்ற தொழில்களில்

பல்வேறு பிரச்சனைகளை சந்தித்து வருகின்றன.

இவற்றைத் தீர்க்க, "தமிழக ஜவுளித் துறை மேம்பாட்டு வாரியம்" அமைத்து அவர்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம்.

## இளைஞர் நலன் :

இன்றைய இளைஞர்களுடைய மிக முக்கிய பிரச்சனை வேலை வாய்ப்பு. சுய சார்பு தொழில் வாய்ப்புகளை உருவாக்கிட பள்ளி – கல்லூரி இறுதி ஆண்டில் புதிய தொழில் முனைவு, தொழில் வாய்ப்பு, தொழில் கடன் உதவி குறித்த புதிய வேலைவாய்ப்புச் செயல்திட்ட முகாம்களை நடத்திச் சிறப்பு செயல் திட்டம் வகுக்கப்படும்.

மாநிலம் முழுவதும் மாவட்ட அளவில் வேலைவாய்ப்பு, தொழில் வணிக

நிறுவனங்கள் – வேலை தேடும் இளைஞர்களை ஒருங்கிணைத்து "மாவட்ட வேலைவாய்ப்பு ஒருங்கிணைப்பு மையம்" உருவாக்கப்படும்.

**மாணவர்கள் நலன் :**

பள்ளி கல்லூரி மாணவர்களிடையே இன்றைய சூழலில் சமூக சீர்கேடுகள் அதிகரித்து இருப்பது மிகுந்த கவலையளிக்கிறது.

குறிப்பாக ஜாதி, மத, இன மோதல், போதைப் பழக்கம் அதிகரிப்பு, பாலியல் குற்றங்கள் அதிகரிப்பது வேதனைக்குரியது. இதனைத் தடுக்க கடந்த காலங்களை போல பள்ளி கல்லூரிகளில் நீதி போதனை வகுப்பு, விளையாட்டு, யோகா, தியான வகுப்புகள் ஆகியவற்றை நடத்திட "புதிய இளைஞர்கள் சிந்தனை செயல்திட்டம்" செயல்படுத்தப்படும்.

ஏழை எளிய மாணவர்களுக்கு மத்திய அரசால் வழங்கப்படும் உயர்தர கல்வி கிடைக்க மாவட்டம் தோறும் நவோதயா பள்ளிகளை அமைப்போம். மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையை தமிழகத்தில் செயல்படுத்துவோம்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்குத் தொழில்நுட்பக் கல்வி மற்றும் மருத்துவக் கல்வி இடஒதுக்கீட்டை 7.5 சதவிகிதத்தை 10 சதவிகிதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசு பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்திடத் தரமானக் கட்டமைப்பு தரமான கல்வி, தரமான வகுப்பறைகள், முறையான ஆய்வுக் கூடங்கள், குடிநீர் கழிப்பிட வசதிகள் மற்றும் தேவையான ஆசிரியர்களை நியமித்து

இலவசமான தரமான கல்வி கிடைக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவோம்.

இலாப நோக்கத்தோடு மாநில அரசின் மானியத்தைப் பெற்று அதிகமான கட்டணத்தை வசூலிக்கின்ற தனியார் பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். தவறினால் அந்தப் பள்ளிகளை அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## பெண்கள் - மகளிர் நலன் :

இன்றைய சூழலில் பள்ளி மாணவிகள் – பணிபுரியும் பெண்கள் – வயதான முதியோர்கள் உள்ளிட்டோர்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனையை விரைவில் பெற்றுத் தருவதற்கான சூழலை உருவாக்குவோம்.

பெண்கள் நாட்டின் கண்கள். பெண்களுக்குப் பள்ளி மற்றும் கல்லூரி முடித்த பெண்கள் சுயதொழில் தொடங்க மத்திய அரசின் “முத்ரா” சிறப்பு கடனுதவித் திட்டத்தின் மூலம் பெற்று தொழில் தொடங்கி பெண்களை தொழில் முனைவராக்குவோம்.

**மாற்றுத்திறனாளிகள் நலன் :**

மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வேலை வாய்ப்புகளில் 5% இட ஒதுக்கீடு வழங்கவும், சுய தொழில் செய்யும் மாற்றுத் திறனாளிகளுக்கு வட்டி இல்லாக் கடன் வங்கி மூலம் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சொந்த வீடு இல்லாத மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச வீடு கட்டித்தர மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்துவோம்.

## அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நலன் :

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நலன் காக்க பழைய ஒய்வூதிய திட்டம் செயல்படுத்த வேண்டும்.

மருத்துவர்கள், செவிலியர்கள், போக்குவரத்து பணியாளர்கள், சத்துணவு பணியாளர்கள், இடைநிலை ஆசிரியர்கள், பகுதிநேர ஆசிரியர்கள், மின்பொறியாளர்கள், தூய்மை பணியாளர்கள் ஆகியோர்களின் கோரிக்கைகள் நிறைவேற்ற அமையப் போகிற எடப்பாடி தலைமையிலான அரசை வலியுறுத்துவோம்.

## தொழிலாளர் நலன் :

அமைப்பு சாரா தொழிலாளர் நலன் காக்க, சமூக நலத்திட்டங்கள், வேலைக்கேற்ற

ஊதியம், மருத்துவக் காப்பீடு பெற்று தரப்படும்.

## முதியோர் நலன் :

முதியோர் நலம் காக்க பாரத பிரதமர் கொண்டு வந்த "ஆயுஷ்மான் பாரத் திட்டத்தையும்" மாநில அரசின் மருத்துவ காப்பீட்டு திட்டத்தையும் இணைத்து "முழுமையான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தை" செயல்படுத்துவதற்கு மத்திய, மாநில அரசுகளை வலிமையாக வற்புறுத்துவோம்.

அனைத்து வயதான முதியோர்களுக்கும் உதவித் தொகை வழங்கிடவும் ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் வசிக்கும் முதியோர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

## கிராம வளர்ச்சி :

கிராம வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி என்ற அடிப்படையில் கிராமக் கட்டமைப்பு, சாலை வசதி, தூயக் குடிநீர் வசதி, மின்சார வசதி, சுகாதார வசதி, மருத்துவ வசதி, போக்குவரத்து வசதி செயல்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## நகர மேம்பாடு :

நகரங்களில் பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பொதுப் போக்குவரத்து, மெட்ரோ ரயில் திட்டம், தரமானக் குடிநீர், தரமான கழிவுநீர்க் கால்வாய், சாக்கடை வசதி, பொது சுகாதாரம், நெரிசல் இல்லா மேம்பாலச் சாலை – சுரங்கச் சாலைத் திட்டம் மற்றும் பொழுதுபோக்கு பூங்காக்கள் ஆகிய வசதிகளை உள்ளடக்கிய "புதிய நகர மேம்பாட்டுத் திட்டம்" உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## சுற்றுச்சூழல் :

இன்றைய நவீன காலத்தில் புவி வெப்பமயமாதல், காற்று மாசு, நீர்நிலை மாசு, நீர் நிலைகளில் சாக்கடை – தோல் சாயக் கழிவு கலப்பு, புகை மாசு போன்றவை நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு. இவற்றைக் கட்டுப்படுத்தி முழுமையாக தடுத்து மாசு இல்லாத தமிழகத்தை உருவாக்கிடுவோம். மரபு சாரா எரிசக்தித் திட்டத்தை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## சிறுபான்மையினர் நலம் :

சிறுபான்மை இஸ்லாமியர்களின் கல்வி வேலை வாய்ப்புகளில் 3.5 சதவீதத்திலிருந்து 5 சதவீகிதமாக உயர்த்தித் தருவோம். இஸ்லாமியர்களின் ஹஜ் பயணத்திற்கும்,

கிறிஸ்தவர்களின் ஜெருசேலம் பயணத்திற்கும் மானியத் தொகையை உயர்த்தித் தருவோம்.

## அறநிலையத்துறை :

தமிழகத்தில் உள்ள எல்லா இந்து கோயில்களையும், கோயில்களின் சொத்துக்களையும் பாதுகாக்க அந்த அந்த பகுதிகளில் உள்ள அனுபவம் வாய்ந்த நேர்மையான நபர்களைக் கொண்டு நிர்வாகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

## வரி உயர்வு :

தமிழகம் முழுவதும் சொத்துவரி, மின்சாரக் கட்டணம் உயர்வு, பத்திரப் பதிவு கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, குடிநீர் கட்டண வரி உயர்வு, குப்பை வரி என்று வரிமேல் வரி விதித்து மக்களை வாட்டி வதைக்கின்ற

இந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப உறுதியேற்போம்.

மின்கட்டண கணக்கீட்டை மாதந்தோறும் கணக்கிடும் முறையை அமல்படுத்தப்பட வேண்டும் என்று அமைய போகிற எடப்பாடியார் தலைமையிலான அரசை வலியுறுத்துவோம்.

**மீனவர் நலன் :**

இந்திய கடல் எல்லையை பாதுகாக்கின்ற இராணுவத்தைப் போன்றவர்கள் நமது மீனவர்கள்.

இலங்கை கடற்படையினரால் பாதிக்கப்படும் தமிழக மீனவர்களுக்கு நிரந்தர தீர்வு காணுவோம். தி.மு.க.—வால் இலங்கைக்கு தாரை வார்த்த கச்சத்தீவை மீட்போம். மீனவர் உரிமை காப்போம்.

தமிழகத்தில் உள்ள பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள 13 லட்சம் ஏக்கர் இனாம் நிலத்தை அரசு முறைப்படி சட்டம் இயற்றி சுமூக தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## கனிம வளம் :

தமிழகத்தில் கனிம வளம் – குறிப்பாக தாது மணல், ஆற்று மணல் போன்ற இயற்கை வளங்கள் சுரண்டப்படுகிறது. இவைகளைத் தடுக்கப் போர்க்கால நடவடிக்கை எடுக்கப்படும். ஆற்று மணல் வேறு மாநிலத்திற்கு கடத்தப்படுவது முற்றிலுமாக தடுக்கப்பட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மத்திய, தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மக்கள் நலன் கருதி செயல்படுத்திக் கொண்டிருக்கிற புதிய நல்லத் திட்டங்கள் அனைத்தையும் தமிழ் மாநில காங்கிரஸ் வரவேற்கிறது. இந்தத் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசுடன் இணைந்து வளமான தமிழகம் வலிமையான பாரதம் உருவாக்குவோம்.